பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 04 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நீடித்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதன் மூலம், சிறந்த பூமியை உருவாக்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரும் விகிதம் அதிகரித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3.** உள்ளூர் விவசாயிகளின் நலன் கருதி கூடுதலாக 25 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**4.** மேற்குவங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் அமைதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்ஆணையம் தெரிவித்துள்ளது.

**5.** தில்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கடும் வெப்ப அலை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - தென்கொரியா நாடுகளிடையே வர்த்தகம், உள்கட்டமைப்பு, டிஜிட்டல் ஒத்துழைப்பு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கல்வி, ஆராய்ச்சி, கலாச்சாரம் மற்றும் மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து தென்கொரிய அதிபர் திரு. லீ ஜெ மியூங்குடன் பேச்சு நடத்தியதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இந்தியாவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள தென்கொரிய அதிபருக்கு திருமதி திரௌபதி முர்மு சிறப்பான வரவேற்பளித்தார்.

<<<<>>>>

நீடித்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதன் மூலம், சிறந்த பூமியை உருவாக்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைத்தளத்தை அவர் வெளியிட்டுள்ள பதிவில், இத்தகைய முன்முயற்சிகளை வலுப்படுத்தும் வகையில், அன்னையின் பெயரால் மரக்கன்று நடும் திட்டத்தின் கீழ், சீதா

அசோக மரக்கன்று ஒன்றை நட்டு வைத்ததற்காக, தென்கொரிய அதிபர் திரு **Lee Jae Myung**-க்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று ஜெர்மனி புறப்பட்டு செல்கிறார்.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவரது இந்தப் பயணம், இரு நாடுகளிடையே பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்முயற்சிகள் குறித்து ஆய்வு செய்வதற்கும், புதிய வாய்ப்புக்களை கண்டறிந்து ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் உதவிடும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இந்தப் பயணத்தின் போது, அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் திரு போரிஸ் பிஸ்டோரியசுடன் பாதுகாப்பு தளவாட உற்பத்தி, சைபர் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, ட்ரோன்

தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துகிறார்.

<<<<>>>>

போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக நடப்பாண்டின் முதல் 3 மாதத்தில் 73 குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து இளைஞர்களை பாதுகாக்கும் வகையில் பல்வேறு உறுதியான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரும் விகிதம் அதிகரித்துள்ளதாக திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - தென்கொரிய நாடுகள் இணைந்து செயல்படுவதற்கான புதிய வாய்ப்புகள் குறித்து அந்நாட்டு நிதிச் சேவைகள் ஆணையத்தின் தலைவர் திரு. Lee Eog Weon உடனான விவாதம்

ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நிதி தொழில்நுட்பம் டிஜிட்டல் கட்டண முறைகள், முதலீடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாவக விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நிதிசார் சேவைகளுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சர்வதேச நிதி சேவைகள் மைய ஆணையம் மற்றும் கொரியாவின் நிதி சேவைகள் ஆணையமும் கையெழுத்திட்டுள்ளன.

<<<<>>>>

உள்ளூர் விவசாயிகளின் நலன் கருதி கூடுதலாக 25 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக மத்திய நுகர்வோர் னால அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்கு குறிப்பில், கோதுமை உற்பத்தி, விலை மற்றும் உள்நாட்டுத் தேவைகளுக்கான கையிருப்பு போன்ற

அம்சங்களை ஆய்வு செய்தபின் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ரபி பருவத்தில், கோதுமை 334 லட்சம் ஹெக்டார் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளதாகவும், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 லட்சம் ஹெக்ட்டர் கூடுதல் என்றும் அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

மத்திய அரசின் வலுவான கொள்முதல் நடைமுறைகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை ஆகியவை அவர்களது நம்பிக்கை அதிகரித்துள்ளதை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் நலன் கருதி, சரியான தருணத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் அமைதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக காணொலி காட்சி மூலம் தேர்தல் அலுவர்களுடன் கலந்துரையாடிய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ்குமார், முதற்கட்டமாக 152 தொகுதிகளுக்கு நாளை மறுநாள் நடைபெற உள்ள வாக்குப்பதிவிற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுது உள்ளிட்ட அசம்பாவித சம்பவங்கள் ஏதுமின்றி தேர்தல் அமைதியாக நடைபெறுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

பிஜேபி, திரிணாமுல் காங்கிரஸ், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கழிவுப் பொருட்களை மறுசுழற்சி செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய அறிவியல் மற்றும்

தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர், உயிரி தொழில்நுட்ப புத்தாக்க நடைமுறைகளை திறம்பட செயல்படுத்துவதன் மூலம் தொழில்துறை வளர்ச்சியை மறுவரையறை செய்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

மின்னணுக் கழிவுகள் மற்றும் பயனற்ற பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் நான்காயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கழிவு மேலாண்மை, பசுமைத் தொழில்நுட்பம், சுழற்சி அடிப்படையிலான உற்பத்தி முறை போன்ற துறைகளில் புதிய வாய்ப்புகள் உருவாகி வருவதாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்காக இந்திய வர்த்தக பிரதிநிதிகள் அடங்கிய குழு வாஷிங்டன் சென்றது.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் திரு. செர்ஜியோ கோர் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய பிரதிநிதிகள் குழுவின் அமெரிக்க பயணம் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான ஒரு முக்கிய நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் நலன் சார்ந்த அம்சங்கள் மேம்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க சந்தையில் இந்தியாவிற்கான வாய்ப்புகளை அதிகரிப்பது குறித்தும், இந்தப் பேச்சுவார்த்தையின் போது கவனத்தில் கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தில்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கடும் வெப்ப அலை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அருணாச்சலப்பிரதேசத்தின் ஓரிரு இடங்களில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

கடலோர ஆந்திரப்பிரதேசம், மேற்குவங்கம், கேரளா, மாஹே, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு வெப்பம் அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் அணி 3-0 என்ற கோல் கணக்கில் காசி அணியை வென்றது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 99 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 199 றன் எடுத்தது.

இதனையடுத்து, 200 றன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய குஜராத் அணி 15 புள்ளி 5 ஓவரில் 100 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெறும் போட்டியில் ஹைராபாத் அணி, தில்லி அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாத்தில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

----------

ஐவரி கோஸ்டில் நடைபெறும் அபிஜான் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெறும் ஆடவர் இரட்டையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் அடில் கல்யாண்பூர் - சசிகுமார் முகுந்த் இணை, இங்கிலாந்தின் Tom Hands - Hamish Stewart இணையை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>